<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்</u>

முன்னிலை : திருமதி. N. பீரித்தி, B.A., B.L.,

நீதித்துறை நடுவர், வானூர்

Crl.M.P.No.409/2026

2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 12-ம் நாள்

ராஜேஸ்வரி
த/பெ.ராஜன்

.....மனுதாரர்

//எதிர்//

காவல் நிலைய அதிகாரி,
மதுவிலக்கு அமல்பிரிவு கோட்டக்குப்பம் காவல் நிலையம்,
குற்ற எண்.154/2026

....எதிர்மனுதாரர்

மதுவிலக்கு அமல்பிரிவு கோட்டக்குப்பம் காவல் நிலைய குற்ற எண்.154/2026 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு சொத்தான TN-14-AQ-2239 என்ற பதிவு எண் கொண்ட Honda Dio என்ற இரு சக்கர வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்க உத்தரவிடும்படி மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. B.Azhagumurugan அவர்கள் ஆஜராகியும், அரசுத்தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்களைப் பரிசீலித்தும் வழங்கப்படும்....

<u>**உத்தரவு**</u>

1) மனுதாரர் தனது மனுவில் TN-14-AQ-2239 என்ற பதிவு எண் கொண்ட Honda Dio என்ற இரு சக்கர வாகனம் தனக்கு உரிமையானது என்றும், கடந்த 06.05.2026 அன்று தனது கணவர் அவரது அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாததால் அவரை ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்காக தனக்கு சொந்தமான மேற்படி இருசக்கர வாகனத்தை எடுத்து சென்றதாகவும் நீண்ட நேரமாகியும் தனது கணவர் வீட்டிற்கு வரவில்லை என்றும் பின்னர் மதுவிலக்கு அமல்பிரிவு கோட்டக்குப்பம் காவல் நிலையத்தார் தன்னை போன் மூலம் தொடர்பு கொண்டு உங்கள் வாகனத்தில் அந்நிய மாநில மதுபாட்டில்கள் எடுத்துசென்றதற்காக மேற்படி காவல் நிலைய குற்ற எண்.154/2026 U/s. 4(1)(A), 4(1)(C), 14(A) TNP Amendment ACt ன் கீழ் வழக்கு பதிவு செய்து தனது வாகனத்தை காவல் நிலைய பொறுப்பில் கைப்பற்றியுள்ளதாகவும் மேற்படி சம்பவத்திற்கும் தனக்கும் தனது வாகனத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இலலை என்றும்,

தனது இருசக்கர வாகனம் தன்னுடைய சொந்த பயன்பாட்டிற்கும் அவசியமான ஒன்றாக இருந்தது என்றும், தற்போது தன்னுடைய வாகனம் தன்னிடம் இல்லாததால் தனக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும், தன்னுடைய வாகனம் மேற்படி காவல்நிலையத்தில் இருந்தால் மழையிலும் வெயிலிலும் வீணாகிபோய்விடும் வாகனத்தின் தன்மை மற்றும் நிறம் மாறிவிடும் மேலும் வாகனம் ஓடாமல் இருந்தால் அதில் உள்ள இன்சின் முற்றிலும் வீணாகிபோய்விடும் என்றும், அதனால் தனக்கு சகல நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும் என்றும், அவ்வாறு தன்னிடம் ஒப்படைக்கும் வாகனத்தை எந்தவித மாறுதல்கள் செய்யவோ, விற்பனை செய்யவோ, அதன் இயந்திர பாகங்களை மாற்றம் செய்யவோ மாட்டேன் என்றும், நீதிமன்றம் கோரும்போது தவறாமல் வாகனத்தை ஆஜர்படுத்துவேன் என்றும், எனவே, தனது வாகனத்தை தற்காலிகமாக தன் வசம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்க வேணுமாய் குறிப்பிட்டுள்ளார்.

2) அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 மற்றும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தாருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் அறிவிப்பில் 1937 ஆண்டு மதுவிலக்கு சட்டதிருத்த மசோதா சட்டம் 1990 ஆம் பிரிவு 14 (A) ன் படி அரசுக்கு ஆதாயம் தேடும் பொருட்டு அரசுடமையாக்க நடவடிக்கை மேற்கொள்ள **காவல் கண்காணிப்பாளர் மற்றும் தலைவர், வாகன அகற்றல் குழு (மதுவிலக்கு), விழுப்புரம் மாவட்டம் ந.க.எண்.102/து.கா.க/மவி/விழு/2026 நாள்.18.05.2026ன்படி** மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பபட்டுள்ளதாகவும் எனவே மேற்படி வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்கக்கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

3) தற்போது தீர்வுக்குரிய விவரம் யாதெனில் மனுதாரர் கோரியுள்ள வழக்கு சொத்தினை மனுதாரரின் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க இம்மனு அனுதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

4) வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்தான TN-14-AQ-2239 என்ற பதிவு எண் கொண்ட Honda Dio என்ற இரு சக்கர வாகனத்தை இந்நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு வழக்கு சொத்தாக சமர்பிக்கவில்லை.

5) மனு, ஆட்சேபணை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி மூன்றுசக்கர வாகனம் வழக்கு சொத்தாக கைப்பற்றப்பட்ட போதிலும் நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக சமர்பிக்கப்படவில்லை. மேலும் அரசு தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபணையில், மேற்படி வாகனத்தை அரசுக்கு ஆதாயம் செய்யப்படுவதற்காக **காவல் கண்காணிப்பாளர் மற்றும் தலைவர், வாகன அகற்றல் குழு (மதுவிலக்கு), விழுப்புரம் மாவட்டம் ந.க.எண்.102/து.கா.க/மவி/விழு/2026 நாள்.18.05.2026ன்படி** மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அந்த அறிவிப்பு ஆவணமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாலும் அரசுக்கு ஆதாயம் செய்யப்படுவதற்கான அறிவிப்பு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும் மேற்படி வாகனமானது குற்றசெயலில் ஈடுபடுத்தப்பட்ட வாகனம் என்பதால் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத்தை இடைக்காலமாக மனுதாரருக்கு வழங்க உத்தரவிடுவது நீதிக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு, என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 12/06/2026-ம் நாள் உத்தரவிடப்பட்டது.

Sd/- N.Preethi,
நீதித்துறை நடுவர்,
வானூர்.